(6) ஒழுங்குப் பிரச்னே.

(அ) விதி 82ஏ-ன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னல் கூறியது, சட்ட திருத்தம் செய்யப்படும் என்பது மட்டுமல்ல, தேர்தல் நடத்தப்படும் என்று அஷ்ஷூரன்ஸ் என்ற முறையில் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அப்படியிருக்கும்போது இப்போதுள்ள அமைச்சர் முன்னல் சொன்னதை மாற்றி திருத்தம் கொடுத்துவிட்டால் அஷ்ஷூரன்ஸ் கமிட்டிக்கே வேலையில்லாமல் போய்விடுகிறது. ஆகவே இப்படி முன்னல் ஒரு உறுதிமொழியைக் கொடுத்துவிட்டு, இப்போது இது போன்று மாற்றிக் கொண்டிருப்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதுதான என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அமைச்சர் பேசிவிட்டு பின்னல் அந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்துவிட்டால், தாங்கள் எழுப்பிய பிரச்னே எழுவதற்கு வழியில்லை. அவ்வாறு திருத்தம் கொடுத்துவிட்ட பின்னல் அஷ்ஷூரன்ஸ் கமிட்டிக்கு இதில் வேலையில்லை. கடைசியில் திருத்தம் செய்து சொன்னதுதான் நிற்கும்.

திரு. க. சுப்பு : இப்போது நடப்பது முன்னல் கூறிய கூட்டத்தின் தொடர் அல்ல. புதிய கூட்டம், முன்னுள் அமைச்சர் மாற்றப்பட்டு புதிய மந்திரியும் வந்திருக்கிறார். இப்படி அடிக்கடி மாற்றம் செய்து கொண்டிருப்பது சரியல்ல. அப்படியானல், Assurance committee will become obsolete.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களது விளக்கம் சரியானதுதான் என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரமில்லை. தயவு செய்து பின்னல் கேளுங்கள், இப்போது நேரமில்லை. உட்காருங்கள்.